உ

சிவமயம்



யாழ்ப்பாணம் வடமராட்சி புலோலி தெற்கில் வாழ்ந்து மறைந்த

அமரர்

# வேலுப்பிள்ளை தங்கம்

அவர்கள்

இறைபதம் எய்தியமை குறித்த

# நினைவு மலர்

05.11.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ்ப்பாணம் வடமராட்சி புலோலி
தெற்கில் வாழ்ந்து மறைந்த

## அமரர்

# வேலுப்பிள்ளை தங்கம்

அவர்கள்

இறைபதம் எய்தியமை குறித்த

# நினைவு மலர்

## 05.11.2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சமர்ப்பணம்

அன்பாலே யாவரையும் அணைத்து
ஆசை மொழி பேசி
இன்பமுடன் நாம் வாழவென்றே
ஈர்த்திடும் திறனும் காட்டி
உண்மை உறுதி பொங்க
ஊக்கமுடன் இருந்து
என்றும் இறையருள் வேண்டி
ஏற்றமாய் வாழ்ந்து
இறைபதம் ஏகிய
அன்புத் தெய்வத்தின்
பாதக்கமலங்களுக்கு......





குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அமரர் வேலுப்பிள்ளை தங்கம்

வையத்துள்:24.04.1930 தெய்வத்துள்:06.10.2009

# திதி நிர்ணய வெண்பா

தாரணியில் திலகம் தங்கம் என்பாள்

தாரணிவோன் றன் கழலைச் சார்ந்த நாள் - பாரறியும்

ஆண்டு விரோதி புரட்டாதியிருபது தேய்பிறையிற்

பூண்ட துதியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தோத்திரப் பாடல்கள்

திருச்சிற்றம்பலம்



## விநாயகர் வணக்கம்

கற்றவர்க்கு உற்றதொரு மிடியைக் கடிந்துதவி
கசிந்துருகும் அன்பரது துயரைப் போக்கறுத்து
நற்றமிழால் அறிஞருடை நாவில் நடம்புரியும்
நல்வேதப் பொருளான ஓங்கார ரூபா
வெற்றிபுனை வேழமுகம் தன்னை உடையோனே
வெற்றிக்கு வித்தான விநாயகப் பெருமானே
இற்றரையில் இளையவன் நான் கவிதை பாட
இயல்பாக வருவாயே காப்பும் நீயே

## தேவாரம்

எத்தாயார் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால்வந் துதவுவார் ஒருவரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங்கொண்டடியேன் என் செய்கேனோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை
ஆட்கொண்ட போதே கொண்டிலையே
இன்றோர் இடையூறெனக் குண்டோ
எண் தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண்ணுடைய தோர் நெருப்பே
வேரணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் மற்புதக் கூத்தா
வம்பொன் செயம் அம்பலத்தரசே
ஏறணி கொடியெம் மீசனே உன்னைத்
தொண்டனே னிசையுமா றிசையே.

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்குங் குழாம் பெருகி
விழாவொலி விண்ணளவுஞ் சென்று
விம்மி மிகு திருவாரூரின்
மழவிடையாற்கு வழி வழி
யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழ அடியாரொடுங் கூடி
எம் மானுக் கேபல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

## திருப்புகழ்

இருந்த வீடும் கொஞ்சிய சிறுவரும் உறுகேளும்
இசைந்த வூரும் பெண்டிரு மிளமையும் வளமேவும்
விரிந்த நாடும் குன்றமும் நிலையென மகிழாதே
விளங்கு தீபங் கொண்டுனை வழிபட அருள்வாயே
குருந்திலேறுங் கொண்டலின் வடிவினன் மருகோனே
குலங்குலாவுங் குன்றுறை குறமகன் மணவாளா
திருந்த வேதத் தண்டமிழ் தெரிதரு புலவோனே
சிவந்த காலும் தண்டையுமழகிய பெருமாளே.

## பட்டினத்தார் திருப்பாடல்

கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும் நின்னஞ் செழுத்தைச்
சொல்லாப் பிழையுந் துதியாப் பிழையுந் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிபடு தெய்வ தோத்திரம்

## புற்றளைச் சித்தி விநாயகர்

பற்றுடனே புற்றளையான் என்று சொல்லி
பாங்காக நிதமுந்தன் வாசல் வந்து
நற்றமிழால் உன்பெயரை நாளும் சொல்லி
நலம் வேண்டிப் பணிந்து நின்றாள் அன்னை
உற்றவுந்தன் பிள்ளையார் கதைக்கும் வந்து
உபயமுமே செய்து மகிழ்ந் திருந்தாள்
புற்றளைசீர் அருள் சித்தி விநாயகரே
புகழடியில் தங்கத்தை வைப்பாய் நீயும்

## பெரிய தேவனத்தாய் சித்தி விநாயகர்

அரியவனே அகத்தூய்மை தனை அளிப்பவனே
அனுதினம் உன் பாதமதை பணிகின்றோமே
அரியயனும் காணாத முதலின் முன்னோன்
அறிவதன முடையோனே ஆற்றல் ஈவோய்
பிரியமுடன் நின்னருளை பிரார்த்தித் தேத்தி
பிரிந்து சென்றவுன் பக்தை தங்கத்தை
பெரிய தேவனத்தாய் மேவும் பிள்ளையாரே
பெருமையுடன் அருளீந்தே பார்த்திடுவாய்

## முறாவில் பிள்ளையார்

வயல் சூழ வனப்போங்க கோயில் கொண்டே
வளமான குளத்தடியில் அருளை ஓய்ச்சி
உயர்வாக அடியார்க்கு அருளைப் பாய்ச்சி
உன்னதத்தைப் பேணும் உயர் பிள்ளையாரே
அயலிருந்து அன்பொழுக பேரைச் சொல்லி
அடியவளாய் உனைப் பணிந்தவெங்கள் தங்கம்
உயர்வுடனே உன்னடியில் நீடு வாழ
உவப்புடனே பிள்ளையாரே அருள்வாய் நீயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உபய கதிர்காம முருகன்

உபய கதிர்காமன் உந்தன் நாமம் சொல்லி
உருக்கமுடன் உன்னடியில் நிதமும் வீழ்ந்தால்
அபயமென அருள்தனையே கடலாய் ஈந்து
ஆற்றலுடை வாழ்வினை நீ வழங்கல் திண்ணம்
தவமடந்தை வோகாம்பாள் தனக்கு அன்று
தலையாய அருளீந்து கோயில் கொண்டாய்
சிவகுமாரா கார்த்திகை சாத்துப்படியும் செய்த
சீலமிகு தங்கத்தை நின்னடியில் வைப்பாய்

## மந்திகை கண்ணகை அம்மன்

முன்னுலக முண்டவர்கள் தேடற்கு அரியவளே
முத்திக்கு முதலான மூலமுதல் நாயகியே
மன்னுதமிழ் சூழ்ந்திருக்க மந்திகையில் இருப்பவளே
மண்ணுலகில் நாம்பாட மனக்கோயில் வருபவளே
மின்னுமணி யல்லவுயர் மெய்யன்பே பெரிதென்று
மிக்க பக்தியோடு வந்து அம்மாளாச்சி என்றே
அன்பொழுக நினதடியே தஞ்சம் என்ற
அன்னையவள் தங்கத்தை தாளில் வைப்பாய்

## வல்லிபுர மாயவன்

திருமணியை நிறத்தமைந்த நீலமணி மெய்ம்மாலே
தித்திப்பாய் அடியோரைக் காத்தே அருள்வோனே
வருமணியாய் வல்லிபுரம் பதியில் உறைவோனே
வருமடியார் வல்வினையைத் தீர்க்கும் கரியோனே
ஒரு மணியாய் உலகனைத்தும் காக்கும் உயர்வோனே
ஓம் ஹரி ஓம் என்போர்க்கு உயர்வை ஈவோனே
கருமணியே கண்ணனெனும் தங்கம் தனையே
காத்திடையா நீயென்றும் கமல பதமிருந்து



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கனை வைரவர்

பொங்கி மடை பரவி
வடை மாலையும் சாற்றி
கங்குல் பகல் உந்தன்
காலடி தனை நினைந்து
பாங்கம் இன்றி பரணி
பூசை தனைச் செய்த
தங்கம் தனை நினது
தாளின் கீழ் வைப்பாயே

## வடுவாவத்தை வீரபத்திரர்

எல்லையிலாப் பரம்பொருளின் வடிவம் ஆகி
எம்மவர்க்கு அருள் புரியும் ஈசன் ஆகி
தொல்லைதவிர்ந் தின்பநாம் பெருக வென்றே
தொன்மையுடன் எமதூரில் உறை கின்றோனே
வல்லமையாய் வடுவாவத்தை தனில் அமர்ந்து
வளங்கள் பலவீந்திடும் வீரபத்திரரே நீயும்
எல்லையிலா அன்போடு உனைப் பணிந்த
எம்மவளாம் தங்கத்தை ஏற்பாய் நீயே

## தேற்றம்

எந்தாயார் எண்பது ஆண்டு காலம்
ஏற்றமுடன் அறவாழ்க்கை வாழ்ந்த செம்மல்
சிந்தைதனை செயல் வடிவ கருவியாக்கி
சிறப்புடனே பேணி வாழ்ந்திட்ட வள்ளல்
விந்தைமிகு வியனுலகம் தனிலே நாமும்
விடிவதற்குள் நடப்படுதது கூறலாமோ
முந்தை வினை முழுமையுடன் முடித்தே அந்த
முதல்வனடி சேர்ந்தாள் என்று தேறுவோமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் வேலுப்பிள்ளை தங்கம் அவர்களின் வாழ்க்கை வரலாறு

எழில் கொஞ்சும் ஈழவளநாட்டின் சென்னியாகிய யாழ்ப்பாணத்தின் கிழக்குப் பாகமான வடமராட்சியில் புலமை ஒலி இடையறாது ஒலிக்கும் புலோலியின் தென்பகுதியிலே சங்கரப்பிள்ளை, சின்னப்பிள்ளை ஆகியோரின் இல்லறம் நல்லறமாக அமைய வைரமுத்து எனும் ஆணும் தங்கம் எனும் பெண்ணும் பிறந்தனர்.

இவர்களுள் வைரமுத்து முன்பே காலமாகப் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், சிறப்பாக வாழ்ந்து வருகின்றனர். பெண்பிள்ளையான தங்கம் 1930ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இருபத்து நான்காம் திகதி பிறந்தார். தன்னுடைய ஆரம்ப, இடைநிலைக்கல்வியை புற்றளை சாரதா பீட வித்தியாசாலையிலே பெற்றார். இவ்வாறு சிறப்பாக வளர்ந்து மணப்பருவத்தினை அடைந்ததும் புலோலி தெற்கு கதிர்காமு சின்னப்பிள்ளை தம்பதியினரின் புதல்வன் வேலுப்பிள்ளையினை மணவாளனாக ஏற்றுக் கொண்டார்.

இவர்களின் மணவாழ்வின் பேறாக தியாகராஜா, மகேஸ்வரி, மனோன்மணி, மனோகரன், என இரண்டு ஆண்பிள்ளைகளும் இரண்டு பெண் பிள்ளைகளும் பிறந்தனர்.

மூத்த மகனான தியாகராஜா, அத்துளு அம்மன் கோயிலடி, கரவெட்டியைச் சேர்ந்த முருகேசு, கண்ணகை தம்பதியினரின் புதல்வி செல்வமலரை மணந்து மதுரா, கபிலன் ஆகிய பிள்ளைகளோடு சுவிஸிலே சிறப்பாக வாழ்ந்து வருகின்றார்.

மூத்த மகளான மகேஸ்வரி கெருடாவில், தொண்டமானாறைச் சேர்ந்த நடராசா, நல்லம்மா தம்பதியினரின் செல்வப்புதல்வன் முத்தையாவை மணவாளனாகப் பெற்று அஜந்தன், வினோதா ஆகிய பிள்ளைகளோடு கனடாவில் ஆனந்தமாக வாழ்ந்து வருகின்றார்.


noolaham.org | aavanaham.org

இளைய மகளான மனோன்மணி உடுப்பிட்டி இலக்கணாவத்தையைச் சேர்ந்த , கந்தசாமி, அம்பிகை தம்பதியனரின் புதல்வன் பிறேம்குமாரை திருமாங்கல்யதாரணம் செய்து பிலக்சன், பிரதீபன் எனும் ஆண் பிள்ளைகளோடு ஜேர்மனியில் இன்பமாக வாழ்ந்து வருகின்றார்.

இளைய மகனான மனோகரன் (உரிமையாளர் வே.மனோகரன் விற்பனை நிலையம்) பெரிய பளை, பளையைச் சேர்ந்த கந்தையா, பாக்கியம் தம்பதியினரின் புதல்வி கலா ஈஸ்வரியை (ஆசிரியை, புலோலி மெ.மி.த.க.பாடசாலை) இல்லாளாகப் பெற்று பவதன்ஜா, ஆரணிகா எனும் மழலைச் செல்வங்களோடு மகிழ்வாக வாழ்ந்து வருகின்றார்.

இவ்வாறு பிள்ளைகளுக்குத் தக்க பராயத்திலே ஏற்றமிகு மணமக்களை இணைந்து இல்லற தீபத்தினை ஏற்றிப் பேரப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்தவர் தங்கம்.

ஊரோடு ஒட்டி உறவாடி இன்ப. துன்பங்களிலே பங்கெடுத்து வாழ்க்கையை அர்த்தமாகக் கழித்தவர் தங்கம்.

ஆலயங்களிலே சிறப்பான முறையிலே பூசைகள், உபயங்கள் செய்ததோடு ஆலய வழிபாட்டிலும் அதி சிரத்தையோடு பங்கு பற்றியவர் தங்கம்.

இளையமகன், மருமகள், பேரப்பிள்ளைகளின் இணைவோடு பிற்காலத்திலே பெருமையுற வாழ்ந்த தங்கம் மற்றைய பிள்ளைகள், மருமக்கள் பாசமிகு பேரப்பிள்ளைகள் அருகில் இல்லாத தவிப்போடு அவர்களின் நினைவோடு உற்றார், உறவினர், சுற்றத்தார், நண்பரின் ஏக்கத்தோடு 2009ம் ஆண்டு அக்டோபர் மாதம் 06ம் திகதி இவ்வுலகவாழ்வினை நீத்து இறைபதம் அடைந்தார்.

**சிவ சிவ என்றிட சிவ கதியாமே....**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரனைய அன்புடைய தங்கம்

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்றாள் ஔவைப்பாட்டி. இந்த உலகில் உள்ள பிறவிகள், ஜீவராசிகள், எண்ணிறந்தவை அவைகள் யாவற்றுள்ளும் மனிதப் பிறவியே மேன்மையானதாக மதிக்கப்படுகின்றது. அதற்கு அவர்களின் பகுத்தறியும் சிந்தனா சக்தியே காரணமாக அமைகின்றது. அன்போடும் அறனோடும் வாழுகின்றபொழுதே அவ்வாழ்க்கை, மனிதம் முழுமை பெறுகின்றது.

அந்த வகையிலே தான் நான் தங்கமாய்ச்சியை பெருமதியுடைய, மதிப்பு மிக்க ஒருவராகக் காண்கின்றேன். முப்பது வருடங்களுக்கு மேலாக நான் அவவோடு பழகியிருக்கின்றேன். எங்கு கண்டாலும் என்ன மோனை? எப்படி சுகம்? பிள்ளைகள் என்ன செய்யினம்? என்று அன்பொழுக விசாரிக்கும் அவரின் அரவணைப்பான வார்த்தைகள் இன்றும் காதில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன.

ஏனோதானோ என்று வாழ்க்கையைத் தட்டிக்கழித்து நடந்தவரல்லர் தங்கமாய்ச்சி உறவினர்கள், சுற்றத்தார்கள் என எல்லோருடனும் அன்பாகப் பழகியவர். அவர்களின் சுக, துக்கங்களிலே உள் அன்போடு பங்கெடுத்தவர். வாழ்க்கையின் எந்நிலையிலும் எவ்வித சலனமுமின்றி இயல்பாக வாழ்ந்தவர்.

"பப்பா, நான் செத்தால் நீ எனது இறுதிப் பயணத்தின்போது உன் குரலில் பாடவேண்டும்" என்று அடிக்கடி கூறினீர்கள். அதைச் செய்தேன் வேறு என்ன என்னால் செய்யமுடியும்.

தங்கம் என்னும் பெயருக்கு ஏற்ப அன்பால் பண்பால் தங்கமாய் பிரகாசித்த, பிரகாசித்துக் கொண்டு இருக்கிற தங்கமாய்ச்சியின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆதி மூலத்தைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**"நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என**
**பெருமை உடைத்து இவ் வுலகு"**

சின்னத்தாய்
புலோலி தெற்கு
புலோலி

நாடகச் சக்கரவர்த்தி
ப.பரராஜசிங்கம் ( பப்பா )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அமரர் வேலுப்பிள்ளை தங்கம் அம்மா அவர்களை உள்ளத்தால் உணர்கின்றபோது.........................**

மாதா, பிதா, குரு, தெய்வம் இவர்களில் மாதாவே முதன்மை வகிக்கின்றாள். நல்ல மாதாவாக வாழ்ந்து பலரது மனங்களிலே இடம்பிடித்து இறைவனடி சேர்ந்த தங்கம் அம்மா அவர்களை கடந்த ஒரு தசாப்தமாகத் தரிசிக்கின்ற வாய்ப்பு எனக்கும் கிட்டியது அவரது உருவத்தை முகத்தினைப் பார்க்கின்றபோது சொந்தத்தாய் போன்ற உணர்வு எமக்கும் ஏற்படுவதுண்டு.

அவரது நான்கு பிள்ளைகளில் மூவர் வெளிநாடுகளில் வசித்து வந்தாலும் மனோ அவர்களின் நிழலில் அவரின் மூச்சும் கலந்தே காணப்படும். வெளிப்படையாக வார்த்தைகளால் காட்டிக் கொள்ளாத புளித்திராட்சை உளவியல் எண்ணப்பாங்கு இவருடையதோர் தனித்துவமான பலரால் புரிய முடியாத திறமையென்றுதான் எண்ணத் தோன்றுகின்றது.

யாரிடமும் கடமைப்படக்கூடாது என்பதில் அம்மாவினுடைய எண்ணம், செயற்பாடு, இவைகளிற்கு இறைவன் வகுத்த இறுதிப்பயணமும் அவருடைய மனம்போல அமைந்தமை எமது மனங்களில் ஆழமாகப் பதிந்த உருக்கமான நிகழ்வுகளாகவே பதிந்து விட்டன.

தம்பி! என்று எம்மை விளிக்கின்றபோதும் சேலையின் மடியில் கட்டிவரும் கோயிற் பிரசாதங்களை அவிழ்த்துத் தருகின்றபோதும் தாயன்பை நாங்களும் பகிர்ந்து கொண்ட உணர்வு இவ்வரிகளை எழுதுகின்றபோதே கண்களை விழிநீர் நிரப்புவதை உணர்கின்றமை ஏதோ ஒரு சிறந்த சக்தி அல்லது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறமை இவரிடம் இருந்தமையை மறுக்க முடியாது.

தன்னுடன் பழகுபவர்களை உரிமையோடு பேசும் தன்மை இவரது அரவணைப்பின் வெளிப்பாட்டிலே ஆற்றுப்படுத்தும் பக்குவம் என்று குறிப்பிடலாம்.

கடந்த ஓரிரு ஆண்டுகளாக உடல்நிலையில் தளர்வு நிலைகள் இருந்தாலும் தனித்து நடமாடுவதும் ஆலயங்களிற்குச் சென்று தனது பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் பேரில் அர்ச்சனை செய்வதும் இவரது வாழ்க்கையைப் படுக்கைக்காலம் அணுகாது விலகியதற்குக் காரணமாகின்றது.

தனக்கு உதவுபவர்களிற்கு கைம்மாறு செய்வதில் தனித்துவமான பண்பு அம்மாவுடன் பழகியவர்கள் யாரிடம் கேட்டாலும் கூறுவார்கள். வீடு கட்டும் வேலை செய்பவர்கள் இவருடைய அனுசரிப்புப் பற்றிப் பேசிக்கொண்டபோது நேரடியாகக் கேட்ட தன்மையினால் இவரைப் புகழ்வதற்காகக் குறிப்பிட்ட வரிகளாக இவை அமைந்து விடா.

இவரது செயற்றிறன்களை எழுதுவதாயின் தனிப்புத்தகம் அடிக்கவேண்டும் என்பதால் அதிகாலைப் பொழுதில் அதிசயாகக் கண் துயில்வது போல அமைதியான உறக்கத்தை அரவணைத்த அமரருடைய ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து நிறைவுறுத்துகின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

க.க.யோகநாதன் B.A DIP IN ED, RAMP
அதிபர்
யா/தும்பளை சிவப்பிரகாச ம.வி
பருத்தித்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கமான தங்கம்

நெருநல் உ ன்னொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு 05.10.2009 இருந்த தங்க அக்கா 06.10.2009 அன்று இவ்வுலகை நீத்து அமரரானார். நிலையாமை என்ற பெருமையுடைய இவ்வுலகத்தில் வாழ்ந்து அமரத்துவம் அடைந்த அன்புக்குரியவராக விளங்கிய வாழ்நாள் முழுவதும் தங்கமாகவே மிளிர்ந்த அன்னாரின் மறைவு நெஞ்சம் விட்டகலாத ஒரு நிகழ்வு ஒருவரும் எதிர்பாராத வகையில், அவரும் இங்ஙனம் நிகழும் எனக் கருதாதநிலையில், இவ்வுலகை விட்டு நீங்கினார்.

மனித வாழ்வில் பிறப்பும் இறப்பும் இயல்பானது இரண்டிற்கும் இடைப்பட்ட வாழ்க்கையே அர்த்தம்மிக்கது. தம் வாழ்நாளை அர்த்தத்துடன் ஆற்றலை தெளிவோடு வெளிக்கொணர்ந்து எம்மத்தியில் வாழ்ந்த அன்னாரின் மறைவு குடும்பத்தினர்க்கு ஒரு பேரிழப்பாகும்.

1930ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ம் திகதி தென்புலோலி ஊரில் பிறந்தார். தங்க அக்கா அவர் வராத்துப்பளைச் சாரதா பீட வித்தியாசாலையில்(தற்பொழுது புற்றளை மகாவித்தியாலயம்)கற்றார். மணப்பருவம் அடைந்ததும் வேலுப்பிள்ளை என்பவரைத் திருமணம் செய்து வைத்தனர். இனிய இல்லற வாழ்வின் பயனாகத் தங்க அக்கா நால்வருக்குத் தாயானார். இருவர் ஆண்கள், இருவர் பெண்கள் தியாகராசா, மனோகரன், மகேஸ்வரி, மனோன்மணி ஆகிய நாமங்களை உடையவர்கள் மனோகரனைத் தவிர ஏனையோர் சுவிஸ், கனடா, ஜேர்மனி ஆகிய நாடுகளில் செல்வச் செழிப்புடன் வாழ்கின்றனர். கடைக்காளையாகிய மனோகரன் தந்தையைப் பின்பற்றி வர்த்தகத்தில் ஈடுபட்டு படிப்படியாக வளர்ந்து பிரபல வர்த்தகராகப் பிரகாசிக்கின்றார். தங்க அக்கா தமது மகனுக்கு உறுதுணையாக இருந்து அவரது தொழிலிலும் உதவினார். மனோகரனும் மனைவியும் பிள்ளைகளும் மிகவும் அன்பாகப் பாசத்துடன் கவனித்து வந்தனர். அவருக்கு அவர்களுடன் மனவேறுபாடு ஏற்படின் தமது இல்லத்துக்குச் சென்று சில நாட்கள் தங்குவார். மகன் மீது பாசம் ஈர்க்கத் திரும்பி வருவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் அவரது மகனது இல்லத்தில் உயிர் பிரியவேண்டும். என்னும் நியதி இருந்ததினால் அவர் மகனது வீட்டில் இருக்கும்பொழுது 06.10.2009 அதிகாலையில் அபரபக்கத் துதியை திதியில் ஆடவல்லானின் பாதார விந்தங்களை அடைந்தார்.தங்க அக்கா இனிய சுபாவம் உடையவர். அவர் சிறந்த பண்பாளர் அனுபவ முதிர்ச்சி பெற்ற அன்னார் எல்லோருடனும் இனிமையாகப் பேசுவார். கண்டிக்க வேண்டிய இடங்களில் அதற்கேற்ப ஒழுகுவார். நேர்மைக்குணம் படைத்தவர் அன்பும் இறைபக்தியும் கொண்டவர். புற்றளைச் சித்தி விநாயகர், மந்திகை கண்ணகை அம்மன், கனை வைரவர் ஆகியோரைத் தினந்தோறும் வழிபடும் நியமம் உடையவர். முறாவிற் பிள்ளையார், வடுவாவத்தை வீரபத்திரர், வல்லிபுர ஆழ்வார், புலோலி பசுபதீஸ்வரர் ஆகியோரையும் துதிப்பவர். ஆயிரம் பிறை கண்டு அறத்தின் இயல்போடு சேர்ந்த இல்வாழ்க்கை வாழ்ந்த பெருமைக்குரியவர். அவரின் ஆருயிர்க் கணவனாக அமைந்தவர் வர்த்தகர் வேலுப்பிள்ளை அவர்கள்.

"மனைத்தக்க மாண்புடைய ளாகித் தற்கொண்டான்
வளத்தக்கான் வாழ்க்கைத் துணை"

என்ற குறளுக்கேற்ப நற்குணங்களும் நற்பண்பும் நிறைந்த துணைவியாக அமைந்து வாழ்க்கை நடத்தியவர்.

நான் கொழும்பிலிருந்து புலோலிக்கு வந்து சில நாட்கள் தங்குவேன். அப்போது அவரை அவரது மகனின் இல்லத்திலோ அல்லது மகனின் வர்த்தகநிலையத்திலோ சந்தித்து அளவளாவுவோம். நான் வந்ததை அறியின் உடனே என்னிடம் வருவார் நெருங்கிய உறவு இருந்தது.

நிலையில்லாத இச்சரீரம் என்றோ ஒரு நாள் மறைவது நிச்சயம். இந்த உண்மையை நினைக்கும்பொழுது மனம் சிறிது ஆறுதல் அடைகின்றது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமசிவனைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

**சே.ஏகாம்பரநாதன்**

**ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணபதி துணை பெற்ற அம்மா

2009.10.06 அன்று இறைபதம் எய்திய வேலுப்பிள்ளை தங்கம் அம்மா அவர்கள் புற்றளைப் பிள்ளையார் மீது மாறாத பக்தியும் பேரன்பும் கொண்ட அடியார் மட்டுமன்றி பிள்ளையாரை அர்ச்சிக்கும் என் மீதும் மிகுந்த அன்பும் பாசமும் குருபக்தியும் கொண்ட தாய்மை உள்ளம் கொண்ட சிறந்த பண்பாளர் பிரபல வர்த்தகர் வேலுப்பிள்ளையைத் தனது இல்வாழ்க்கையின் துணைவராகப் பெற்று சிறந்த பதியாக வாழ்வமைத்து பண்பான புத்திர செல்வத்துடன் அனைத்து செல்வங்களும் நிறைவுடன் பெற்று பரிபூரண வாழ்வை வாழ்ந்த செம்மனச்செல்வி புற்றளைப் பிள்ளையாருக்கு புனித பணிகள் செய்து இன்புறுவதில் மகிழ்ச்சி கொண்ட அம்மா அவர்கள் தான் சீரும் சிறப்புமாக வளர்த்தெடுத்த மழலைச் செல்வங்களையும் அவர் தொண்டின்பால் ஈடுபடுத்தி அபிஸேகம் பூசை, ஆராதனைகள், தீப ஒளி என்றெல்லாம் தொண்டுகள் புரிவதால் புற்றளைப் பிள்ளையார் அருள் அளவிலாமல் பெற்று செல்வம் தொழில் பெருகி மக்கள் மத்தியில் மாண்புடன் சிறப்புற வாழ வழியமைத்து பிள்ளைகளின் பாசத்தின் திருவுருவான பேரன்னை கணபதி கருணையால் அம்மாவின் ஆத்மா சாந்தி பெறும்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

பிரதம குரு சோமாஸ்கந்த ஜெயபாலசுந்தரக்குருக்கள்
குருமகா சந்நிதானம்
புற்றளைப் பிள்ளையார் தேவஸ்தானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# கந்தர் சஷ்டி கவசம்

காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம் போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்(து) ஓங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலர் அருள் கந்தர்
சஷ்டிக் கவசந் தனை.

குறள் வெண்பா

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடனஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்க வென்று வந்து
வரவர வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணபவ வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தென்னைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிர்ஐங்கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம் சிவ குகன் தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற் சீராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரி ரிரிரி ரிரிரி ரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வா
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோத னென்று
உன்திருவடியை உறுதியென்றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணிணைக்காக்க
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை ரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கையிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணையாக
நாவிற் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் மன்னரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதா ளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு

முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடிவேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூ ரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே! திகழொளி பவனே!
பரிபுர பவனே! பவமொழி பவனே!
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்!
கந்தா குகனே கதிர்வேலவனே!

கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா!
தணிகா சலனே சங்கரன் புதல்வா!
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகியவேலா
செந்தில்மா மலையுறும் செங்கல்வ ராய!
சமரா புரிவாழ் சண்முகத் தரசே!
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னாவிருக்க யானுனைப்பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலாயுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க!
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க!
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்!
வாழ்க வாழ்க வாரணத்துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்

தஞ்சமென் றடியார் தழைத்திட அருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒரு நாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கவும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங்கு அருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடி பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத்தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பாயுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும்வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

முற்றிற்று.

**"உறங்குவது போலும் சாக்காடு
உறங்கி விழிப்பது போலும் பிறப்பு"**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சகலாகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின் பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொ
லோசக மேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கொன்டு கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாபமயிலே
சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவிநின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமும் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காய்யுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பனமு மவதான
முங்கல்வி சொல்லவல்ல
நல்வித் தையுந்தந் தடிமை
கொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொரு
கால முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலாவல்லியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கும் பொருட்கும் முயிராமெய்ஞ்
ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார் நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும்விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே.

பித்ருக்களின் ஆசீர்வாதம் இருந்தால் எந்தப் பிரச்சனையும் தீர்க்கப்படலாம். அது இல்லாவிட்டால் யாராலும் எதுவும் செய்ய முடியாது. எனவே ஒருவர் தனது பெற்றோருக்கு மரியாதை செய்து தவறாமல் வணங்க வேண்டும். ஏனெனில் தந்தையும், தாயும் பித்ருக்களின் பிரதிநிதிகள் ஆவர். பெற்றோர் காலமானதும் ஒருவர் பக்தியுடனும், உண்மையுடனும் பித்ரு கர்மாவை செய்து பித்ருக்களிடமிருந்து ஆசி பெற வேண்டும்.

- ஸ்ரீ ஸ்ரீதர் குருஜி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

முத்துநல் தாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடம் தூபம்நல் தீபம் வைம்மின்
சத்தியும் சோமி யும்பார் மகளும்
நாமக ளோடுபல் லாண்டி சைமின்
சித்தியுங் கௌரி யும்பார்ப் பதியும்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தனை யாறனம் மானைப் பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே

பூவியல் வார்சடை எம்பி ராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடு மின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நி லாமே
குனிமின் தொழுமினெங் கோனங் கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மை யாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும் நாமே

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதி பரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் றன்பெருமான்
ஆழியான் நாதன் நல் வேலன் தாதை
எந்தரம் ஆளுமை யாள் கொழுநற்
கேய்ந்த பொற்சுண்ணம் இடித்தும் நாமே.

காசணி மின்கள் உலக்கை யெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுகெடுப் பாரய னும்மரியும்
அன்றி மற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்க ளெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்த வில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்க ணப்பற்
காடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

உலக்கை பலவோச்சு வார்பெரியர்
உலகமெமெ லாமரல் பொதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதா தென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருகனைப் பாடிப் பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்தும் நாமே.

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடகம் மெல்லடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்
காடக மாமலை அன்ன கோவுக்
காடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே.

வாட்டடங் கண்மட நல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்தி லங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையகம் எல்லாம் உரல தாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந் துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாண னுக்கே
ஆடப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடச்
தித்தெம் பிராரொடும் ஆட ஆடப்
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையோ டாட ஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே

மாடு நகைவாள் நிலாவெ றிப்ப
வாய்திறந் தம்பவ ளந்து டிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்ட வாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடி னானுக்
காடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே

மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் றன்னை
ஐயனை ஐயர்பி ரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைத் பொற்றொ டித்தோள்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னிடைச் செந்துவர் வாய்க்க ருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்க ளப்பன்
எம்பெரு மானிட வான்ம கட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்ற கப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே.

சங்கம் அரற்றச் சிலம்பொ லிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலை யாடச்
செங்கனி வாயித ழுந்து டிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராவி ரைக்குங்
கற்றைச் சடைமுடியான் கழற்கே
பொங்கிக் காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே.

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயி னானைச்
சித்தம் புகுந்துதித் திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகன் ஏந்தியவெல் கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன் செய்சுண்ணம் இடித்து நாமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்ச டைமேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை யேந்தும்
ஊனக மாமழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய வன்று
போனக மாகநஞ் சுண்டல் பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே.

ஆயன்தலை கொண்டுசெண் டாடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடி
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும் நாமே.

வட்ட மலர்க்கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடி
சிட்டர்கள் வாழுந்தென் றில்லை பாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடி
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்தும் நாமே

வேதமும் வேள்வியும் ஆயி னார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயி னார்க்குச்
சோதியு மாயிருள் ஆயி னார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயி னார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயி னார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயி னாருக்
காதியும் அந்தமும் ஆயி னாருக்
காடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

**இருளைச் சபித்துக் கொண்டிருப்பதை விட ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றி வைப்பது எவ்வளவோ மேலானது!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மண்ணில் 24 - 04 - 1930

விண்ணில் 06 - 10 - 2009

## அமரர் திருமதி வேலுப்பிள்ளை தங்கம்

**எமது பாடசாலை ஆசிரியை திருமதி கலாஈஸ்வரி மனோகரன் அவர்களின் அன்பு மாமியார் அகிலம் நீங்கியதால் ஆறாத்துயரைப் பகிர்ந்து கொள்கின்றோம்.**

தங்கம் சமாதியானதால்
எங்களுள் சோகம்.
பொங்கும் கண்ணீரை
தாங்கிய கண்களுடன்
தாளாது நிற்கின்றோம்
மனோகரன் அம்மா
மண்விட்டுச் சென்றதால்
மனையே வாடுகின்றது
துணையாய் நின்று
துயர் நீக்க
தூக்குகிறோம் கைகள்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

*பாடசாலைச் சமூகம்*
*யா/ புலோலி மெ.மி.த.க.பாடசாலை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மனோகரன் சயிக்கிள் உதிரிப்பாக உரிமையாளரின் அன்புத்தாயார்.

## அமரர் வேலுப்பிள்ளை தங்கம்

**அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த வேதனையடைகின்றோம்.**

அவரின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின்
ஆத்மா
எல்லாம் வல்ல பரம்பொருளின் திருவடிகளில்
நித்திய பேரின்பம் பெற இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**தாயின் மடியில்**
24.04.1930

**இறைவன் அடியில்**
06.10.2009

**குளோபல் கணனிப் பதிப்பகம்**
**சாரையடி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கடை கட்டிட உரிமையாளர் முத்தையா அவர்களின் மாமியார்

**அமரர் திருமதி வேலுப்பிள்ளை தங்கம் அவர்களின்**

# கண்ணீர் அஞ்சலி

மண்ணில்

24 - 04 - 1930



விண்ணில்

06 - 10 - 2009

## அமரர் திருமதி வேலுப்பிள்ளை தங்கம்

அன்பு மிகப் பொழிந்து ஆதரிக்க
உன்போல் வேறு எவருமில்லை
தெம்பு தனைக்காட்டி எம்மை
கலகலக்க வைத்திடுவாய்
இன்பம் எமக்களித்து எம்மை
பார்த்திருப்பாய் எந்நாளும்
துன்பம் எமக்காக்கி
சென்றதுமேன் அம்மாவே!

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
கண்ணகை சிகை அலங்கரிப்பு நிலையம்
தாஸ் வைண்டிங்
ரஞ்சன் போட்டோ & வீடியோ
S.R.தையலகம்

06.10.2009
யாழ் வீதி, மந்திகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மண்ணில்
24 - 04 - 1930



விண்ணில்
06 - 10 - 2009

**மனோகரன் காட்வெயர் உரிமையாளரின் அன்புத்தாயார்.**

## அமரர் திருமதி வேலுப்பிள்ளை தங்கம்

அன்பின் உறைவிடமாய் பொறுமையின் சிகரமாய்
பாரினில் உயர்ந்தவரே இல்ல விளக்காய் ஒளிர்ந்தவரே
உயர்வின் ஏணியாய் நின்ற எம் குலவிளக்கே!
நீவளர்த்த உறவில் எம் உள்ளங்கள் நெகிழ்கின்றன.
புன்னகை தவழும் பொலிவான முகமும்
கனிந்த பார்வையும் சினமறியாப் பேச்சும்
சின்ன உடலழகும் நிமிர்ந்த நடையும்
நினைக்கின்ற போதெல்லாம் எம் நெங்சில் நிழலாடும்.
நீர் பேழையில் வந்ததேனோ உம்மை பிரிந்த உந்தன்
பிள்ளைகள் இனி என்ன தான் செய்வார்கள்
அவர்களுக்கு நாம் என்னத்தைச் சொல்லி
உந்தன் இழப்பை ஈடு செய்வதம்மா.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மனோகரன் ஹாட்வெயர் ஊழியர்களும்,**
**லாண்ட்மாஸ்ரர் உரிமையாளர்களும்**
**சாவகச்சேரி வீதி, மந்திகை, புலோலி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மண்ணில்

24 - 04 - 1930



விண்ணில்

06 - 10 - 2009

மனோகரன் சயிக்கிள் உதிரிப்பாக உரிமையாளரின்
அன்புத்தாயார்.

## அமரர் திருமதி வேலுப்பிள்ளை தங்கம்

அன்போடும் பண்போடும் ஆதரவாகப் பழகியமை
அகிலமதில் இணைந்திருந்த அம்மா தங்கமே
என்னே பரிதாபம் எமையெல்லாம் தவிக்கவிட்டு
எங்கோ நீயும் பறந்து விரைந்து சென்றாய்
உன்னரிய பிள்ளைகள் தம்மை
உருக்குலைந்து கதறவிட்டு
நெடுந்தூரம் சென்றதென்ன

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனடி சேர பிரார்த்திக்கின்றோம்.

*கேசவன் சில்க்*
*குடும்பத்தினர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

